# விவாகமும் விவாகரத்தும்

## என்பதின் பேரில் கேள்விகளும் பதில்களும்

2



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# சகோதரன் பில் மத்தேயு 19:9ல் காணப்படுகின்ற வேசித்தனம் மற்றும் விபச்சாரம் இவைகளுக்கு உள்ள வித்தியாசம் என்ன?



## செய்தி: 59-06-28E கேள்விகளும் பதில்களும் COD #10

Q.91. **சகோதரன் பில் மத்தேயு 19:9ல் காணப்படுகின்ற வேசித்தனம் மற்றும் விபச்சாரம் இவைகளுக்கு உள்ள வித்தியாசம் என்ன?**

185. மத்தேயு 19:9ல், இயேசு, "ஆதலால், எவனாகிலும் தன் மனைவி, வேசித்தனம் செய்த காரணத்தினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளி விட்டு, வேறொருத்தியை விவாகம் பண்ணினால், விபாரஞ்செய்கிறவனாயிருப்பான்" என்று கூறினார். வேசித்தனம் மற்றும் விபச்சாரம் என்பதற்கிடையேயுள்ள வித்தியாசத்தைப் பொறுத்தமட்டில், இந்த வார்த்தையை எப்படி வேண்டுமானாலும் பொருத்தலாம். ஆனால் அவர் அங்கே எதைக் குறித்து

பேசுகிறார் என்பதைத் தெளிவாக பார்ப் போமானால், திருமணமாகாத ஒரு பெண்ணால் விபச்சாரம் செய்ய முடியாது, ஏனென்றால், அவளுக்கு புருஷன் இல்லா மல் இருப்பதால் அவனுக்கு மாறாக அவளால் விபச்சாரம் செய்வதற்கில்லை. ஆனால் அது அவளுக்கோ ஒரு அசுத்த மான ஒன்றாகும். அவள் அவ்விதமாகச் செய்திருந்தால், அதை அவள் புருஷ னுக்கு, அவர்கள் இருவரும் விவாகமாவ தற்கு முன்னதாகவே அவள் அறிக்கை செய்ய வேண்டும். அப்படி செய்யாதிருக் கும் பட்சத்தில், அவளுடைய புருஷனுக்கு பின்னர் அது தெரியவருமானால், அவளை தள்ளிவிட அவனுக்கு உரிமை உள்ளது, ஏனெனில் அவள் ஒரு பொய்யான வாக்கை செய்தவளாகக் காணப்படுகிறாள். ஏனெனில் வேதாகமம் கூறுகிறது, "இது... இல்லை வழக்கம் கூறுகிறது, "இது உங்களுக்கு நன்றாக அறியப்படுவதாக

(எனக்கும் அவ்வாறு தான் செய்யப்பட்டது) தேவனுடைய வார்த்தையின் பிரமாணம் அனுமதிக்கும் விதத்தைத் தவிர அதற்கு மாறாக தம்பதிகள் இணைக்கப் படுவார்களாயின், அவர்களுடைய விவாகம் சட்டப் பூர்வமான ஒன்றல்ல. இருதயத்தின் அந்தரங்கங்கள் எல்லாம் பகிரங்கமாக வெளிப்படுத்தப்படப் போகின்ற அந்த நியாத்தீர்ப்பின் நாளிலே பதிலளிக்கப்போகிற உங்கள் இருவருக்கும் நீங்கள் செய்ய வேண்டியதென்ன என்று நான் கட்டளையிடுகிறதாவது, சட்டப்படி யாக நீங்கள் இணைக்கப்படக்கூடாது என்று உங்கள் இருவருக்கும் ஏதாவது தடை இருக்குமானால் இப்பொழுதே அதை நீங்கள் அறிக்கையிடுங்கள்" உங்களுக்கு புரிகின்றதா. பாருங்கள்?

186. ஆதலால் வேசித்தனம் என்பது ஒரு இளம்பெண் அசுத்தமான ஜீவியம் செய்வாளெனில், அது தான் வேசித்தன

மாகும், ஏனெனில் அவளுக்கு புருஷன் இல்லை. ஆனால் அவளுக்கு விவாகமாகி, பிறகும் அதே விதமாகவே அவள் ஜீவிப்பாளெனில், அவள் தன் புருஷனுக் கெதிராக விபச்சாரம் செய்கிறாள்.

187. சில காலத்திற்கு முன்னர் ஒரு பெண் என்னிடம் வந்து, "ஓ, நான் எல்லாவற்றையும் அறிக்கை செய்து விட்டேன்" என்றாள். அவள் மிகவும் பதற்றம் கொண்டவளாக நரம்புத்தளர்ச்சி கொண்டிருந்தாள், “அதைக் குறித்த எல்லாவற்றையும் தேவனிடம் அறிக்கை செய்து விட்டேன்” என்றாள்.

188. நான், "நீ அதை உன் புருஷனிடம் அறிக்கையிட வேண்டும். நீ தேவனுக் கெதிராக விபச்சாரம் செய்யவில்லை; உன் புருஷனுக் கெதிராகத்தான் விபச்சாரம் செய்தாய்” என்றேன். அது சரி.


189. ஆகவே ஒரு மனிதன் ஒரு பெண்ணை விவாகம் செய்யுமுன், அந்தப்

பெண்ணோ அவனை விவாகம் செய்யும் முன்னர் அசுத்தமான ஜீவியம் செய்து, பிறகு அவள் அவனிடம் வந்து திருமணம் செய்து நீண்ட காலம் சென்று பிறகு அவள் அவனிடம் "உங்களிடம் ஒன்றை நான் கூற விரும்புகிறேன். நான் வேறொரு மனித னுடன் வாழ்ந்து திரிந்து கொண்டிருந்தேன், உங்களிடம் நான் கூறவில்லை” என்று கூறுவாளானால், அவன் அவளைத் தள்ளி விட்டு வேறொருத்தியை விவாகம் செய்ய இவனுக்கு உரிமையுண்டு என்று இயேசு கூறினார், ஏனெனில் துவக்கத்திலேயே இவர்களுக்கு விவாகமாகவில்லை, ஏனெ னில் அவனுக்கு எதிராக ஒரு - ஒரு பொய்யை வஞ்சகமாக கூறியிருந்தாள்.

இப்பொழுது, வேறொரு கேள்வி இங்கேயிருக்கிறது... உங்களுக்கு நன்றி.



**1 கொரிந்தியர் 7வது அதிகாரம், 15 ஆம் வசனம்.** இப்பொழுது அவர்கள் கேட்டுள்ள கேள்வி: **சகோதரன் பிரன்ஹாம், ஒரு சகோதரியோ அல்லது சகோதரனோ மறுபடியுமாக விவாகம் செய்து கொள்ள தடையில்லை என்று இது குறிப்பிடுகிறதா?**



# செய்தி: 62-05-27 கேள்விகளும் பதில்களும் COD #16

Q.169. **1 கொரிந்தியர் 7வது அதிகாரம், 15 ஆம் வசனம்.** இப்பொழுது அவர்கள் கேட்டுள்ள கேள்வி: **சகோதரன் பிரன்ஹாம், ஒரு சகோதரியோ அல்லது சகோதரனோ மறுபடியுமாக விவாகம் செய்து கொள்ள தடையில்லை என்று இது குறிப்பிடுகிறதா?**

இல்லை...!

29. பாருங்கள், இவர் என்ன கூறுகிறார் மற்றும் இவருடைய கேள்வியை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் விவாகம் செய்யமுடியாது. பாருங்கள், அது வேதாகமத்தில் முரண்பாட்டைக் கொண்டு வரும், வேத வசனங்கள் ஒன்றுக் கொன்று முரண்பாடானது அல்ல. புரிகின் றதா? இப்பொழுது, நாம்... நீங்கள் வேதா கமத்தை (ஒரு வசனத்தை வாசிப்பதனால்

மாத்திர மே) அது என்ன கூறவேண்டு மென்று நீங்கள் விரும்புகிறீர்களோ அந்த விதமாகவே உங்களால் செய்யமுடியும் - உங்கள் கருத்துக்கு பொருத்தமான விதத்தில் பொருந்தும்படியாக. ஆனால் அவை எதைக் குறித்து பேசுகின்றதோ அந்த கருத்தைத்தான் நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறீர்கள்.

30. இந்த விதமாக இருக்கலாம்- நான் சகோதரன் நெவிலுடன் பேசிக் கொண் டிருக்கையில் நான் போர்ட் (Board) என்னும் வார்த்தையை கூறுவதை நீங்கள் கேட்கிறீர்கள் என்று வைத்துக் கொள் வோம்.

31. அதன் பிறகு நீங்கள் திரும்பிச் சென்று “அவர் எதைக் குறித்து பேசிக் கொண்டிருக்கிறார் என்று உங்களுகத் தெரியுமா? இன்றிரவு நாம் அவரை சோர்ந்து போகும் அளவு “போர்” (Bored) அடித்து விட்டோமா” என்று கூறுவீர்கள்.

பாருங்கள்? ஆனால் மற்றொரு நபரோ, “நீ கூறுவது தவறு, அவர் என்ன கூறமுற் பட்டார் என்றால், மரப்பலகை (Board, போர்ட்) கட்டணம் அவர் செலுத்த வேண்டுமாம், அவர் அதற்கான பணத்தை செலுத்தப் போகிறார்” என்று கூறுவார். இன்னொரு நபர், “ஓ, இல்லை, அவர் அதை அர்த்தம் கொள்ளவில்லை, வீட்டின் பக்கவாட்டில் உள்ள அந்த தடித்த அட்டையைத் தான் (போர்ட், board) குறிப்பிட்டார்” என்று கூறினார். அடுத்த நபரோ, “இல்லவே இல்லை, என்ன வென்று நான் உங்களுக்கு கூறுகிறேன், அவர் துளையிட்டு (boring, போரிங்) ஒரு ஓட்டையை போடுவதைக் குறித்து அவர் விளக்க முயற்சித்துள்ளார் என்று நான் நம்புகிறேன்” என்று கூறினார். பாருங்கள்? பாருங்கள்?

32. நீங்கள் உரையாடலை கவனிக்க வேண்டும், அப்பொழுது தான் நீங்கள்

எதைக் குறித்து பேசுகிறீர்கள் என்பதை அறிந்தவர்களாயிருப்பீர்கள், ஏனெனில் இங்கே பவுல் சில சமயங்களில் அவர் களுடைய கேள்வியையே பதிலாக அளிக் கின்றான்.

33. சில சமயங்களில் அவர்கள், “வேதாகமம் தனக்குத் தானே முரண்பா டாக அமைந்துள்ளது” என்று கூறுகிறார் கள். நான் அதைப் பார்க்க விரும்புகிறேன். அவ்விதமாக அது முரண்பாடாக இல்லை. முப்பத்திரண்டு வருடங்களாக இந்த பிரசங்க பீடத்தின் பின்னால் நான் நிற்கின்றேன், இன்னும் ஒரு முரண் பாட்டைக் கூட நான் காணவில்லை. பாருங்கள்? அது தனக்குத்தானே முரண் பாடாக அமையவில்லை! அது... அதை முரண்பாடாக ஆக்குவது நீங்கள்தான், பாருங்கள். அதை புரிந்து கொள்வதில்லை. பரிசுத்த ஆவியானவர்தாமே வார்த்தைக் குரிய வெளிப்பாட்டை வெளிப்படுத்து

பவர் ஆவார். ஆதலால் அந்த முரண்பாடு...

34. பாருங்கள், பவுல் அவர்களுக்கு எழுதுகின்றான், “நீங்கள் இந்த - இந்த காரியத்தை கேட்டீர்கள்” என்கின்றான். நீங்கள் கேட்டீர்கள் என்று மாத்திரம் அவன் கூறவில்லை, அவன் அதையே கூறுகின்றான். பிறகு அவன் திரும்பவுமாக அவர்களுக்கு பதிலளிக்கின்றான், அது அவர்கள் கேட்டதற்கு முரண்பாடாக இருந்தது.

35. அவர்கள், “நாங்கள் இதை, இதை மற்றதை செய்கின்றோம்” என்று கேட்டனர். பவுல் திரும்பி ஏதோ ஒன்றைக் கூறுகிறான், பாருங்கள், அது ஒரு முரண்பாடு போலக் காணப்படுகிறது. அது அப்படி அல்ல. நீங்கள் முழு வசனத்தையும் முழு அதிகாரத்தையும், வாசிப்பீர்களானால், அவர்கள் அவனுக்கு என்ன எழுதினார்களோ அதற்கு அவன் விளக்கம் அளிக்க முயற்சிப்பதை நீங்கள் காண்பீர்கள்.

36. இப்பொழுது, இதை நாம் பார்ப் போமாக, அது... அந்த விதமாகத்தான் நீங்கள் வேதாகமத்தில் முரண்பாடுகளாக புரிந்து கொள்கிறீர்கள், ஆனால் அது அவ்விதமாக அல்ல. இப்பொழுது இங்கே, அந்த நபரானவர் தெரிந்து கொள்ள விரும்புகிற, அல்லது அவர்கள் எதை அறிந்து கொள்ள விரும்புகின்றனரோ அதைப் பற்றிய ஒரு கேள்வி:

**கர்த்தருக்குள்ளாக இருக்கின்ற ஒரு சகோதரனோ அல்லது சகோதரியோ, மறுபடியும் மறுவிவாகம் செய்ய தங்கள் துணையை விட்டுவிட்டு, விவாகம் அல்லது மறுவிவாகம் செய்துகொள்ளலாமா?** செய்யக் கூடாது.

37. இப்பொழுது நாம்... 10வது வசனத் திலிருந்து ஆரம்பிப் போம்:

**விவாகம் பண்ணிக் கொண்டவர்க ளுக்கு நானல்ல, கர்த்தரே** (பாருங்கள்?) **கட்டளையிடுகிறதாவது:**

**மனைவியானவள் தன் புருஷனை விட்டுப் பிரிந்து போகக் கூடாது:** (பாருங்கள்)

**பிரிந்து போனால் அவள் விவாகமில் லாதிருக்கக்கடவள், அல்லது புருஷ னோடே ஒப்புரவாகக்கடவள்; புருஷனும் தன் மனைவியைத் தள்ளிவிடக்கூடாது.** (அதுதான் கர்த்தருடைய கட்டளைகள், பாருங்கள்)

**மற்றவர்களைக் குறித்துக் கர்த்தர் அல்ல, நானே சொல்லுகிறதாவது:** (பாருங்கள்) **சகோதரனொருவனுடைய மனைவி அவிசுவாசியாய் இருந்தும்...**

38. இப்பொழுது, அவனுடைய பொருளைக் கவனியுங்கள், பாருங்கள். நீங்கள் இதற்கு முன்பிருந்து, அல்லது அதிகாரம் முழுவதுமாக நீங்கள் வாசித்துப் பார்த்தால், "நாம் ஒரு மனைவியை மணந்து, அவள்... நாம்... நான் விவாகம்

செய்து, பிறகு நான் ஒரு விசுவாசியாகும் போது, என் மனைவியும் ஒரு விசுவாசி யாக இல்லையெனில், நான் அவளைத் தள்ளி விடுவேனாக". ஓ, இல்லை. அது அவ்வாறாக இல்லை. அவ்விதமாக நீங்கள் செய்யவே கூடாது. பாருங்கள்? புரிகின் றதா?

**...சகோதரனொருவனுடைய மனைவி அவிசுவாசியாயிருந்தும், அவனுடனே வாசமாயிருக்க அவளுக்குச் சம்மத மிருந்தால், அவன் அவளைத் தள்ளி விடாதிருக்கக்கடவன்.** (அது, விவாகத்தின் காரணத்தால் அல்ல, அது அவிசுவாசத்தின் காரணத்தால். திரும்பவும் "மறுவிவாகம் செய்ய அல்ல. பாருங்கள், அவளுடனே தரித்திருத்தல்)

**அப்படியே ஒரு ஸ்திரீயினுடைய புருஷன் அவிசுவாசியாயிருந்தும், அவ ளுடனே வாசமாயிருக்க அவனுக்குச் சம்மதமிருந்தால், அவள் அவனைத்**

**தள்ளிவிடாதிருக்கக்கடவள்** (அது சரியே! பாருங்கள்) (ஆங்கில வேதாகமத்தில், அவள் அவனை விட்டுப் பிரிந்து செல்லாதிருக்கக்கடவள், Let her not leave him என்று இருக்கிறது - தமிழாக்கியோன்)

**என்னத்தினாலெனில், அவிசுவாசியான புருஷன் தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான், அவிசுவாசியான மனைவியும் தன் புருஷனால் பரிசுத்தமாக்கப்படுகிறாள். இல்லாவிட்டால் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்குமே; இப்பொழுதோ அவைகள் பரிசுத்தமாயிருக்கின்றன.**

**ஆகிலும் அவிசுவாசி பிரிந்துபோனால் பிரிந்து போகட்டும்...**

39. இப்பொழுது, அந்த அவிசுவாசி, “இனிமேல் உன்னோடு நான் வாழப்போவதில்லை, நீ ஒரு கிறிஸ்தவனாகிவிட்டாய்” என்று கூறினால், ஒரு மனிதன் தன்னுடைய

மனைவியிடம், "நீ இரட்சிக்கப்பட்டு, ஒரு காலத்தில் நாம் இருந்த உலகத்தை விட்டு நீ வெளியே செல்லப் போவதால், நான் உன்னை விட்டு பிரிந்து செல்லப் போகிறேன்" என்று கூறுவானானால், அதைக் குறித்து உன்னால் ஒன்றுமே செய்ய முடியாது. அவன் பிரிந்து செல்லட்டும். பாருங்கள்?

40. அல்லது அந்த பெண் தன்னுடைய கணவனிடம் "நான் அந்த உருளும் பரிசுத்தர் கூட்டத்தினருடன் சேரமாட்டேன். நான் அதைச் செய்ய மாட்டேன்! நான் உங்களை விட்டுப் பிரிந்து சென்று விடுகிறேன்" என்று கூறுவாளானால், நீ சபையை விட்டு விடாதே, அவள் பிரிந்து செல்ல விட்டுவிடு. பாருங்கள்?

41. இந்த விதமான ஒரு விஷயத்தில் ஒரு சகோதரனோ அல்லது ஒரு சகோ தரியோ அடிமைப்பட்டவர்கள் அல்ல, அது என்னவெனில், உங்களுடைய துணை

அதற்காக உங்களை தள்ளிப்போட்டு, பிரிந்து போக விரும்புவது. நீங்கள் இன்னுமாக அவர்களைப் பற்றிக்கொண் டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் உங்களை விட்டு பிரிந்து போக விரும்புவது, கிறிஸ்துவின் காரணமாக உங்களை அவர்கள் விட்டுவிடப் போகி றார்களென்றால், அவர்கள் செல்லும் படிக்கு விட்டு விடுங்கள். ஆனால் நீங்கள் மறுவிவாகம் செய்துக் கொள்ளக் கூடாது! “ஆனால் சமாதானமாயிருக்கும்படிக்கே தேவன் நம்மை அழைத் திருக்கிறார்”. பாருங்கள்? இப்பொழுது, நீங்கள் திரும் பவுமாக மறுவிவாகம் செய்து கொள்ள லாம் என்றல்ல, அவன் ஏற்கெனவே அதைக் கூறிவிட்டான், ஆனால் நீங்கள் ஒரு அவிசுவாசிக்கின்ற புருஷனோ அல்லது அவிசுவாசிக்கின்ற மனைவியோ அவர்களுக்கு வாழ விருப்பமில்லை யெனில், நீங்கள் அவர்களுடன் வாழ வேண்டிய அவசியம் இல்லை.

42. அவர்கள் உங்களுடன் வாழ விரும்பி “பாருங்கள், நீங்கள் சபைக்குச் செல். அங்கே செல்ல நீங்கள் விரும்பி னால், அது உன் காரியம். உங்கள் சபைக்கு நீங்கள் செல்ல விரும்பினால், நீ செல். என்னைப் பொறுத்தவரையில் நான் அதை விசுவாசிப்பில்லை. மேலும் நான் உங்க ளுக்காக எதை வேண்டுமானாலும் செய் வேன், நான் உங்களுடைய வழியில் குறுக்கே நிற்கமாட்டேன், நீ சபைக்கு செல்” என்று கூறுவார்களானால், அப்பொழுது நீங்கள் அப்படியே வாழ வேண்டும், ஏனெனில் உங்களுடைய பரிசுத்தமாக் கப்பட்ட ஜீவியம் அந்த விசுவாசியை (believer) பரிசுத்தப்படுத்தி, அவர்கள் விசுவாசிக்கும்படிக்குச் செய்யும். பாருங் கள்? மனிதனோ அல்லது ஸ்திரீயோ அது இரண்டு பக்கங்களிலும், பாருங்கள். நீங்கள்...

43. ஆனால் இப்பொழுது நீங்கள், "நான்... சகோதரன் பிரன்ஹாம், நான் விவாகம் செய்து கொண்டேன். என்னுடைய மனைவி ஒரு அவிசுவாசியாயிருக்கிறாள், ஆனால் நான் விவாகம் செய்யத்தக்கதாக ஒரு சகோதரி இங்கே இருக்கின்றார்கள். நான் இந்தப் பெண்ணை விட்டுவிட்டு அந்த பெண்ணை விவாகம் செய்யப் போகிறேன்" என்று கூறலாம். ஓ, இல்லை! நிச்சயமாக கூடாது! மரணம் உங்களைப் பிரிக்கும்வரை என்று தான் உங்களுடைய வாக்கை நீங்கள் அளித்திருக்கிறீர்கள், உங்கள் வாழ்க்கைத் துணை மரிக்கும் வரைக்கும் (வேதாகமத்தில்) நீங்கள் மறுவிவாகம் செய்து கொள்ள உங்களுக்கு அனுமதி ஒன்று கூட இந்த உலகத்தில் கிடையாது. அது சரியே. இருக்கின்ற ஒரே அடிப்படை! வாழ்க்கைத் துணை மரித்தால் தவிர மறுவிவாகம் செய்து கொள்வது என்பது எங்குமே கிடையாது. அவ்வளவுதான். பாருங்கள்?

44. வேதாகமத்தை தனக்குத் தானே முரண்பாடாக ஆக்க உங்களால் முடியாது. ஆகவே வசனங்களை முன்னும் பின்னுமாக வாசியுங்கள், அப்பொழுது அவன் எதைக் குறித்துப் பேசுகிறான் என்பதை நீங்கள் கிரகித்துக் கொள்வீர்கள். இப்பொழுது, இது என்னவென்றால்... பாருங்கள்:

**அப்படியென்றால் ஒரு சகோதரியோ அல்லது ஒரு சகோதரனோ மறுவிவாதம் செய்து கொள்ளலாமா?**

45. இல்லை ஐயா. பாருங்கள் அவன் அதை முதலில் விளக்கினான். பாருங்கள்:

**...விவாகம் பண்ணிக் கொண்டவர்களுக்கு நானல்ல, கர்த்தரே கட்டளையிடுகிறதாவது; மனைவியானவள் தன் புருஷனை விட்டுப் பிரிந்து போகக்கூடாது.**

**பிரிந்து போனால் அவள் விவாகமில்லாதிருக்கக்கடவள், அல்லது புருஷ**

**னோடே ஒப்புரவாகக்கடவள்...** (பாருங் கள்?)

46. ஒரு விசுவாசி திரும்பவுமாக மறுவிவாகம் செய்யும்படிக்கு உயிரோ டிருக்கின்ற வாழ்க்கை துணையுடன் ஒப்புரவாகுதல் என்பதைப் போன்ற காரி யங்கள் கிடையவே கிடையாது.

இப்பொழுது இங்கே மற்றொன்று உள்ளது. இரண்டாவது இவ்விதமாக உள்ளது:



கிறிஸ்தவ மார்க்கம் என்பது வெளிப்புற அழகல்ல, அது உட்புறத்தில் உள்ளது; சமாதானம், அமைதி, தங்களை சமாதானமுள்ள, அமைதியான ஆவியினால் அலங்கரித்துக் கொள்ளுதல்; அதுவே கர்த்தருக்கு முன்பாக விலையேறப்பெற்ற பொக்கிஷமாய் உள்ளது. அதையே நாம் ஸ்திரீகளிலும், மனிதரிலும், யாராயிருந்தாலும், காண விரும்புகிறோம்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 64-08-23E கேள்விகளும் பதில்களும் COD #20

Q .282. **சகோ. பிரன்ஹாமே...** (அந்த கேள்விக்கு பதில் கூறி முடித்து விட்டேனா? பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் குறித்து நான் கூறினேனா?... ஆம், அதுதான் அது. இல்லையா? சரி, அதை நான் சரியாக புரிந்து கொள்ளவில்லை என்றால், என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நான்... இவை மிகவும் அருமையான கேள்விகள். ஒரு கேள்வியின் பேரில் ஒரு இரவு முழுவதும் நிலைத்திருந்து, சகோதரனே, அதை தொட்டிருக்கவும் முடியாது). **நீர் தேவனுடைய ஊழியக்காரனாயிருப்பதை நான் மெச்சுகிறேன். சத்தியத்தின் செய்தியை நான் விசுவாசிக்கிறேன். என் மனைவி எனக்கு செவி கொடுப்ப**

**தில்லை, அவள் இந்த செய்தியைக் குறித்து ஒன்றுமே கூறுவதில்லை, அவள் செய்தி ஒலிநாடா எதையும் கேட்பதில்லை. என் வேலையைக் குறித்து எனக்கு நரம்பு கோளாறு ஏற்பட்டுள்ளது. என் மனைவியும் விசுவாசித்து என் பிள்ளைகளுக்காக ஜெபிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். சகோ. பிரன்ஹாமே, நான் தேவனுடைய நண்பனாயிருக்க விரும்புகிறேன். என் வாழ்க்கையில் நான் தேவனுடைய சித்தத்தில் காணப்பட வேண்டுமென்று விரும்புகிறேன். அவருடைய ஊழியக்காரனாயிருக்க விரும்பு கிறேன்** (அந்த நபர் "அடுத்த பக்கம்" என்று சொல்லி கையொப்பமிட்டிருக்கிறார். ஒரு நிமிடம் பொறுங்கள்.) **நான் சிறுவனா யிருந்த போது, நான் ஒரு பிரசங்கியாயிருக்க விரும்புகிறேன் என்று எல்லோரிடமும் கூறி யிருக்கிறேன். நான் என்ன செய்யவேண்டு மென்று தேவன் விரும்புவாரென்று எனக்குத் தெரியவில்லை. நான் கர்த்தருக்காக எதை**

**யும் செய்ய சித்தமாயிருக்கிறேன். இவண் கர்த்தருக்குள் உங்களுடையவன்.**

58. இப்பொழுது, நல்ல கேள்வி. அந்த மனிதன் உத்தமமானவர். அவருடைய மனைவி, அவருடைய பாகமாயுள்ள அவருடைய துணைவி... இதனுடன் நான் ஒன்றைக் கூட்டலாமா? என் சகோதரரே, இதை நான் கர்த்தருடைய நாமத்தில் உரைக்கிறேன். இந்நாட்களில் ஒன்றில், கர்த்தருக்குச் சித்தமானால், நான்! "விவாகமும் விவாகரத்தும்' என்னும் செய்தியை இந்தக் கூடாரத்தில் பிரசங்கித்து, அதை ஒலிநாடாவில் பதிவு செய்யலாம் என்று எண்ணுகிறேன். அது பிரிக்குமானால், அது பிரிக்கத்தான் வேண்டும். அது கர்த்தருடைய வார்த்தை என்று நாம் நிரூபிக்க போகின்றோம்.

59. பாருங்கள், என் சகோதரரே, இதைச் செவிகொடுத்து கேளுங்கள். அநேக சமயங்களில் இவ்வுலகில் நீங்கள் தவறான துணைவிகளைப் பெறுகிறீர்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? சில அழகிய பழுப்பு நிறமுள்ள, அல்லது நீல நிறமுள்ள, அல்லது சாம்பல் நிறமுள்ள கண்கள் உங்களை மயக்கி, நீங்கள் செவிகொடுத்திருக்கக் கூடாத இடத்துக்கு உங்களைக் கவர்ந்து விடுகிறது. மனிதர் பலர் அதை உணருகின்றனர்.

60. விவாகம் செய்கின்ற ஒரு மனிதன், முதலில் அதை ஜெபத்துடன் அணுக வேண்டும். வெளித்தோற்றத்தில் அழகா யுள்ள பெண்ணை நீங்கள் தெரிந்து கொள்ளக் கூடாது, உட்புறத்தில் அழகா யுள்ள பெண்ணை, உங்கள் பிள்ளை களுக்கு தாயாயிருப்பவளை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

61. பிரசங்க பீடத்திலிருந்து ஒரு ஊழியக்காரன் இதைக் கூறும்போது, அது பயங்கரமாகத்தொனிக்கும் என்று அறிந் திருக்கிறேன். நான் மேற்கில் இருந்த போது, கால்நடைகளை வாங்குபவர் களுடன் நான் சென்றிருக்கிறேன். நாங்கள் குட்டிப் போடும் கால்நடைகளை வாங்கு வோம், அவர்கள் ஒரு மந்தையைத் தொடங்க விரும்புவார்கள். அங்கு நான் நிறைய கற்றுக் கொண்டேன். மாடுகளை ஏலம் விடுபவர்கள் செய்வதையும் வாங்கு பவர்களின் செயல்களையும் நான் கவனித் திருக்கிறேன். நான் இந்த சபைக்கு வருகிற ஒரு வயோதிபனுடன் அங்கு செல்வது வழக்கம். அவர் தொடக்கத்தில் நாத்தீகனா யிருந்தார், அவரை நான் கிறிஸ்துவி னிடத்தில் நடத்தினேன் - திரு. ஜேவரெஸ். உங்களில் பலருக்கு அவரை ஞாபக மிருக்கும். அவர் கொலராடோவில்

மாட்டுப் பண்ணை வைத்திருக்கிறார். நாங்கள் செல்வோம், அவர்கள் பசுக்களை கவனிப்பார்கள்.

ஒரு நாள் ஒரு பசுங்கன்று 11,000 டாலர்களுக்கு விற்கப் பட்டதை நான் கண்டிருக்கிறேன். அது சிறு கன்று. அது குட்டி போட்டதேயில்லை. ஜேவ் என் னிடம், "என்னிடம் போதிய பணம் இருந்தால், இந்தக் கன்றுக்குட்டியை நான் வாங்கி விடுவேன்" என்றார்.

“அவர் மாட்டுப் பண்ணை சொந்தக் காரர். அவருடைய தொழிலை அவர் புரிந்து கொண்டிருக்கிறார்" என்று நான் நினைத்துக் கொண்டேன். நான், "ஜேவ், நீர் ஏன்... இந்த கன்றுக்குட்டிக்குள்ள தகுதி என்ன? அது ஹியர்ஃபோர்ட் ரகத்தைச் சேர்ந்தது. அங்குள்ள மற்றக் கன்றுக்குட்டி சிறிது நேரத்துக்கு முன்பு 300 டாலர்

களுக்கு விற்கப்பட்டது. எனக்கு அது பெரிய கன்றுக்குட்டியாக காணப்பட்டது" என்றேன்.

62. அவர், “பாருங்கள், பில்லி, கன்றுகள் வாங்கும் விஷயத்தில் நீங்கள் ஒன்றைப் புரிந்து கொள்ளவில்லை. நீங்கள் தெருப் பிரசங்கம் செய்வதில் மட்டுமே நிலைத்திருக்க வேண்டுமென்று எண்ணு கிறேன். ஏனெனில் கால்நடைகளை குறித்து உங்களுக்கு ஒன்றுமே புரிவதில்லை. அங்குள்ள அந்த கன்றுக்குட்டியைப் பாருங்கள்" என்று சொல்லிவிட்டு, அது இருந்த இடத்துக்கு நடந்து சென்று. “அதன் கண்களில் முறைப்பான பார்வையைக் கண்டீர்களா?” என்று கேட்டார்.

நான், "ஆம்" என்றேன்.

அவர், "அதன் குட்டிகளுக்கும், பேரக் குட்டிகளுக்கும், கொள்ளுப் பேரக் குட்டி

களுக்கும் அந்த முறைத்த பார்வை வழிவழியாக வந்து கொண்டிருக்கும். அவை தங்களையே அழித்துக் கொள்ளும். தங்கள் கன்றுக்குட்டிகளுக்கு அவை ஒருபோதும் தாயாக இருக்காது. அவை களை நீங்கள் கொழுக்க வைக்க முடியாது; அவை இறைச்சிக்கு உதவாது. இப்பொழுது விற்கப்பட்ட அந்த சிறு கன்றுக் குட்டியை கவனியுங்கள். அதன் பார்வை எவ்வளவு சாந்தமாயுள்ளது! அதன் அமைதியான பார்வையை, தயவுள்ள பார்வையைக் கவனியுங்கள். அதன் கண்களில் ஒரு முறைப்பும் கூட இல்லை. அது தன் கன்றுக்குட்டிகளுக்கு உண்மை யான தாயாக இருக்கும். அதன் குட்டியின் கன்றும். அந்தக் கன்றின் கன்றும் தொடர்ந்து இந்தப் பார்வையை பெற்றி ருக்கும். அவையனைத்தும், இனச் சேர்க் கைக்கு சரியான காளைகளை கிடைக்கு

மானால், தங்கள் குட்டிகளுக்கு தாயாக இருக்கும். ஆனால் இந்த முறைப்பான பார்வை கொண்ட கன்றுக்குட்டியை ஒரு மனிதன் வாங்கினால், அது சொற்பமான மந்தையையே உண்டாக்கும்" என்றார்.

நான், "ஆம், ஐயா! நன்றி!" என்றேன்.

63. அது ஸ்திரீகளுக்கும் பொருந்தும். முகத்தில் வர்ணம் பூசின, முறைப்பான கண்களைக் கொண்ட, ஏதோ ஒரு விதமான மிருகத்தைப் போல் காணப்படும் ஒருத்தியை உங்கள் மனைவியாகத் தெரிந்து கொள்வீர்களானால்; அவள் மானிட தோற்றத்தை உருக்குலைக்கிறாள், அவள் எதையுமே சாதிக்க மாட்டாள். அவள் எல்லா நேரங்களிலும் ஓடிக் கொண்டேயிருப்பாள். கிறிஸ்தவ மார்க்கம் என்பது வெளிப்புற அழகல்ல, அது உட்புறத்தில் உள்ளது; சமாதானம், அமைதி, தங்களை

சமாதானமுள்ள, அமைதியான ஆவியி னால் அலங்கரித்துக் கொள்ளுதல்; அதுவே கர்த்தருக்கு முன்பாக விலையேறப்பெற்ற பொக்கிஷமாய் உள்ளது. அதையே நாம் ஸ்திரீகளிலும், மனிதரிலும், யாராயிருந் தாலும், காண விரும்புகிறோம். இப் பொழுது...



# இப்பொழுது. விவாகரத்துக்குப் பிறகு மறுபடியும் விவாகம் செய்து கொள்ள வேதத்தின்படி அனுமதி வழங்கும் ஏதாகிலும் ஒரு நிலைமையுண்டா?



## செய்தி: 64-08-30M கேள்விகளும் பதில்களும் COD #21

Q .327. **இப்பொழுது. விவாகரத்துக்குப் பிறகு மறுபடியும் விவாகம் செய்து கொள்ள வேதத்தின்படி அனுமதி வழங் கும் ஏதாகிலும் ஒரு நிலைமையுண்டா?** (இப்பொழுது இது என்னவென்று பார்க்கலாம்... இதில் இரண்டு மூன்று கேள்விகள் அடங்கியுள்ளன என்று நினைக்கிறேன்). **முன்பு விவாகமாகி யிருந்து, இப்பொழுது விவாகமான நிலையில் இல்லாமல் இருந்தால், மீண்டும் விவாகம் செய்து கொள்வதற் கென அனுமதி வழங்கும் விவாகரத்துக் கான ஆதாரம் ஏதாகிலும் உண்டா? இதற்கான விடையைப் பெற நான் ஒலிநாடாவை வாங்கிக் கொள்வேன்.**

**மிக்க நன்றி. ஞாயிறன்று இதை எதிர் பார்ப்பேன்.**

37. நல்லது, இப்பொழுது, இதை நான் கூறி விட்டேன், பாருங்கள்... வேண்டாம்... நான் - நான்... இவையெல்லாம் நேராக் கப்படும் ஒரு நிலையை நாம் அடையும் வரைக்கும், இதை நான் தனியே விட்டு விடுகிறேன் (பாருங்கள்). இப்பொழுது இதை ஞாபகம் கொள்ளுங்கள், தேவனுக்கு சித்தமானால், நான் திரும்பி வந்தவுடன். அடுத்த முறை நான் வரும்போது, கர்த்தருக்குச் சித்தமானால், இந்த பொரு ளின் பேரில் நான் பிரசங்கிப்பேன். பாருங்கள்? இப்பொழுது... அப்பொழுது, அதை நாம் எப்படியும் ஒலிநாடாவில் பதிவு செய்வோம். அது நோகப் பண்ணினால், அது நோகப் பண்ணும்; அது தெளிவாக்கினால், அது தெளிவாக்கும். நீங்கள் தைரியமாயிருங்கள், பாருங்கள்.

**ஒரு மனிதன் ஒரு ஸ்திரீயை விவாகம் செய்து கொண்ட பிறகு, அவள் அவனை விவாகரத்து செய்து விட்டு வேறொருவரை மணந்து கொள்ளலாமா? இருவருமே வேறொருவரை விவாகம் செய்து கொண்டால், அவர்கள் இருவருமே விபச்சாரம் செய்கிறவர்களாகி விடுவார்களா?**

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-08-23M கேள்விகளும் பதில்களும் COD #19

Q .255. **சகோ. பிரன்ஹாமே, விவாகமும் விவாகரத்தும் என்னும் பிரச்சினையின் பேரில் இந்த நேரத்தில் எங்களுக்கு அறி வுறுத்த கர்த்தர் உமக்கு அனுமதி அளிப் பாரா? கேள்வி: ஒரு மனிதன் ஒரு ஸ்திரீயை விவாகம் செய்து கொண்ட பிறகு, அவள் அவனை விவாகரத்து செய்து விட்டு வேறொருவரை மணந்து கொள்ளலாமா? இருவருமே வேறொருவரை விவாகம் செய்து கொண்டால், அவர்கள் இருவருமே விபச் சாரம் செய்கிறவர்களாகி விடுவார்களா? இது சர்ப்பத்தின் வித்துடன் இணையும் என்று நீர் கூறினீர். அது எப்படி?**

200. நமக்குள்ள இந்தக் கேள்வித் தொகுப்பிலேயே இது மிகவும் வஞ்சக மான கேள்விகளில் ஒன்றாகும். இது இன்றைக்கு உலகில் அதிகமாக பிரச்சி னைக்குரிய கேள்வியாகும். இப்பொழுது. நான் சொல்வதைக் கேளுங்கள். இதற்கு எனக்கு ஒரு காரணம் உண்டு. இன்று காலையில் விவாகமும் விவாகரத்தும் என்பதை குறித்து சரியான காரியத்தை இந்த சபைக்குக் கொண்டு வந்து அது ஒலிநாடாவில் பதிவாகி மற்றவர்கள் கேட்பார்களானால், அது தேசத்திலுள்ள ஒவ்வொரு சபையையும் உடைத்துப் போடும். பாருங்கள்? அது உண்மை.

201. இப்பொழுது, எனக்கு உதவி செய்யும், வேதாகமம் என் முன்னில் இதோ வைக்கப்பட்டுள்ளது. இந்த கேள்வி யின் பேரில் **கர்த்தர் உரைக்கிறதாவது**

என்பதை நான் பெற்றிருக்கிறேன். இதைக் குறித்து தர்க்கம் செய்யும் இரு சாராருமே தவறாயிருக்கின்றனர். ஏற்கனவே விவாக மானவர்களை மறுபடியும் விவாகம் செய்கிறவர்கள், இருவருமே தங்கள் செய லில் தவறு செய்கின்றவர்களாயிருக்கின் றனர். ஆனால் இதற்கு இடையில் - பாதையின் நடுவில் - சத்தியம் உள்ளது. நான் விரும்பவில்லை... நான் ஒரு செய்தி ஒலிநாடாவை தயாரிக்கப் போகின்றேன், எனக்கு ஏதாவது நேரிடும் பட்சத்தில் நான் போய்விட்ட பிறகு (பாருங்கள்?) அதை சகோதரர்கள் சபைகளுக்கு போட்டுக் காட்டலாம். நான் அதன் பேரில் ஒரு ஒலிநாடாவை தயாரித்து, அது எங்குள்ளது என்பதை உங்களுக்கு சபையில் காண்பிக்க விரும்புகிறேன்; ஆனால் நான் கர்த்தரால் ஏவப்படும் வரைக்கும், அதைக் குறித்து ஒன்றையும் சொல்ல மாட்டேன். இப்படிப்

பட்ட காரியங்களில் நான் கர்த்தரால் ஏவப்பட வேண்டுமென்று உணருகிறேன்; நான் ஏவப்படாமல் போனால், நான் நன்மை செய்வதைக் காட்டிலும் அதிக சேதத்தை விளைவிப்பேன். பாருங்கள்?

202. இப்பொழுது இதை நீங்கள் கவனிக்க விரும்புகிறேன். கேள்வி: "ஒரு மனிதன் ஒரு ஸ்திரீயை விவாகம் செய்து கொண்ட பிறகு, அவள் அவனை விவாகரத்து செய்து விட்டு வேறொருவரை மணந்து கொள்ளலாமா? இருவருமே வேறொருவரை விவாகம் செய்து கொண் டால், அவர்கள் இருவருமே விபச்சாரம் செய்கிறவர்களாகி விடுவார்களா?" இப்பொழுது, என் நண்பனே, உங்கள் மனதை நோக வைக்க நான் விரும்ப வில்லை, ஆனால் அதுதான் உண்மை. "தள்ளி விடப்பட்டவளை விவாகம்

பண்ணுகிறவன் விபசாரஞ் செய்கிறவனா யிருப்பான்" என்று இயேசு கூறியுள்ளார் (மத். 5:32). பாருங்கள்? அதை நான் கூற விரும்பவில்லை, ஆனால் அதுதான் உண்மை...

203. "இது சர்ப்பத்தின் வித்துடன் இணையும் என்று நீர் கூறினீர்". பாருங்கள்? நான் அவ்விதம் கூறினதாக எனக்கு ஞாபகமில்லை. நான் ஒருக்கால் எங்காவது கூறியிருக்கக் கூடும், அதைக் குறித்து ஏதாவது கூறியிருக்கக் கூடும்.

204. அன்றொரு நாள், நான் ஒன்றைக் குழப்பிக் கொண்டது போல, அதை நான் கேட்க நேர்ந்தது. அது... அதை நான் அந்த நேரமே கண்டுபிடித்து விட்டேன்; அது ஒலிநாடாவில் பதிவாகியுள்ளது. அதை நான் ஒருக்கால் கேட்பேன். நான் ஏழு எக்காளங்களைக் குறித்து பேசிக் கொண்

டிருந்த போது, அதை நான் ஏழு எக்காளங்கள் என்று சொன்னேன். நான் பெந்தெகொஸ்தே பண்டிகையை குறிப் பிட்டுக் கொண்டிருந்தேன். பெந்தெ கொஸ்தே பண்டிகையிலிருந்து எக்காளப் பண்டிகை வரைக்கும் இடையே ஏழு ஓய்வு நாட்கள். பஸ்கா பண்டிகைக்கும் பெந்தெகொஸ்தே பண்டிகைக்கும் இடையே (பாருங்கள்?) அது ஐம்பது நாட்கள். அதை நான் குறிப்பிட்ட போது, "அது ஏழு சபை காலங்கள்" என்றேன்.

205. ஒலிநாடாவில் (நீங்கள் அந்த ஒலிநாடாவைப் பெற்றுக் கொள்ள நேர்ந்தால்) - அந்த ஒலிநாடாவில் அது அதற்கு பிறகு ஏழு மாதங்கள் கழித்து எக்காளப் பண்டிகை வருகிறது, அது ஏழு சபைக் காலங்களைக் குறிக்கிறது என்று இருக்க வேண்டும் - ஏழு மாதங்கள், ஏழு

ஓய்வு நாட்கள் அல்ல. ஏழு ஓய்வு நாட்கள் என்பது... அதை நான் அங்கு விளக்கி யிருக்கிறேன். நான் ஏழு ஓய்வு நாட்கள் என்று கூறினேன். ஆனால் நான் அதே கருத்தை பெந்தெகொஸ்தே பண்டிகைக்கு ஏழு மாதங்களுக்கு பிறகு என்பதற்கும் கொண்டு சென்று விட்டேன். அந்த பண்டிகையின் போது கதிர் கொண்டு வரப்பட்டு அசைவாட்டப்படுகிறது. அப்படியானால் பாருங்கள். இதை ஞாபகம் கொள்ளுங்கள், அந்த நேரத் துக்குப் பிறகு கதிர் அப்பமாக மாறுகிறது. ஒரு கதிர், அதன் பிறகு எல்லாமே அப்பத்துக்குள் சென்று விடுகிறது. ஓ, அதில் பெரிய போதகம் அடங்கியுள்ளது; அதன் ஓரத்தைக் கூட நான் தொடவில்லை. அதை நீங்கள் ஒலிநாடாவில் கேட்க நேர்ந்தால், உங்கள் வேதத்தை திறந்து பாருங்கள் (லேவியராகமம் 23ம்

அதிகாரம் - தமிழாக்கியோன்). பாருங்கள், அதற்கு பிறகு ஏழு மாதங்கள் கழித்து. ஏழு மாதங்களை எண்ணுங்கள்: ஜனவரி, பெப்ருவரி, மார்ச்சு, ஏப்ரல், மே, ஜூன், ஜூலை - அது ஜூலை மாதம். ஏழு மாதங்கள், அது. ஏழு சபை காலங்கள் முழுவதையும் குறிக்கிறது. ஏதாவதொரு போதகர் அதை கண்டு பிடிக்கக் கூடும், அப்பொழுது குறை கூறப்படுவேன். அங்கு பார்த்தீர்களா? சரி.

206. இப்பொழுது, இதன் பேரில், நாம் ஒருவாறு... நீங்கள்... இதை நான் கூறுகிறேன். இதை நான் கூறட்டும், கர்த்தர் அல்ல, இதை நான் கூறுகிறேன். இந்த நேரத்தில் உங்களுக்கு மறுபடியும் விவாக மாயிருந்து, நீங்கள் இருவருமே இரட்சிக் கப்பட்டு, பரிசுத்த ஆவியினால் நிறையப் பட்டு, பிள்ளைகளைப் பெற்றிருப்பீர்க

ளானால் (இப்பொழுது. இது நான் என்பதை ஞாபகம் கொள்ளுங்கள், கர்த்தர் அல்ல, பாருங்கள்), நீங்கள் தொடர்ந்து ஒன்றாக வாழுங்கள்; சந்தோஷமாயிருங் கள்; ஏனெனில் உங்கள் முதல் மனைவி யுடன் நீங்கள் வாழ முடியாது, வாழ முடிந்திருந்தால் இவளை நீங்கள் விவாகம் செய்து கொண்டிருந்திருக்க மாட்டீர்கள். இவளை நீங்கள் விட்டு உங்கள் முதல் மனைவியிடம் செல்வீர்களானால், நீங்கள் முதலில் செய்ததை விட இன்னும் மோசமான காரியத்தை செய்பவராகி விடுவீர்கள். பாருங்கள்? எனவே பாருங் கள், நீங்கள் எல்லாவற்றையும் குழப்பிக் கொண்டிருக்கிறீர்கள், அதிலிருந்து மீள வழியேயில்லை. நான் வேதத்திலிருந்து உண்மையில் ஒரே ஒரு வழியைத் தான் எடுத்துக் கூற முடியும்; நீங்கள் இருவருமே தனியாக வாழுங்கள். பாருங்கள்?

207. இப்பொழுது, ஆனால்... இந்த ஒரு வழியைத் தான் இப்பொழுது நான் கூற முடியும், ஆனால் வேறொரு காரியம் அதில் உள்ளது, அதை இப்பொழுது என்னால் உங்களிடம் கூற முடியாது. "இது கர்த்தர் அல்ல, நான், தொடர்ந்து வாழுங்கள்" என்று நான் கூறக் காரணம். இதை நீங்கள் ஒலிநாடாவில் பதிவு செய்ய நேர்ந்து என்றாகிலும் ஒரு நாள், இதைக் குறித்து நான் மறுபடியும் பேச நேர்ந்தால், இதை நான் கூறிய விதத்தை ஞாபகப் படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் ஞான முள்ளவர்களாயிருந்தால், அதை நான் எவ்விதம் அப்பொழுது கூறினேன் என்பதை நீங்கள் கேட்டு அறிந்து கொள்ள முடியும் (பாருங்கள்?), அப்பொழுது நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.



# இரட்சிக்கப்பட்ட ஒரு மனைவி தன் கணவர் பாவியாயிருந்தால் அவர் அணுகினால் மறுக்க வேண்டுமா?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-08-23E கேள்விகளும் பதில்களும் COD #20

Q .312. **இரட்சிக்கப்பட்ட ஒரு மனைவி தன் கணவர் பாவியாயிருந்தால் அவர் அணுகினால் மறுக்க வேண்டுமா?**

192. இல்லை, ஐயா! இல்லை ஐயா! அவர் உன் கணவர். அவ்விதம் செய் வதனால் அவரை தேவனிடத்திலிருந்து அதிக தூரம் 'துரத்தி விடுவாய். பார்? அது உண்மை, சகோதரனே, சகோதரியே. நீ அவரை விவாகம் செய்து கொண்டாய்; அவர் உன்னுடையவர், நீ அவருடைய வள்.

# சகோதரன் பிரன்ஹாமே, விவாகரத்துக்குப் பிறகு திருமணம் செய்துக் கொள்ள அனுமதிக்க ஏதாகிலும் வேதவாக்கியம் உண்டா?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 63-03-24M, முத்திரைகள் மீதுள்ள கேள்விகளும் பதில்களும்


Q.177. **சகோதரன் பிரன்ஹாமே, விவாகரத்துக்குப் பிறகு திருமணம் செய்துக் கொள்ள அனுமதிக்க ஏதாகிலும் வேத வாக்கியம் உண்டா? இது அதிக முக்கிய மானதாகும்.**

100. இது "முக்கியமானதென்று அறிவிக்கப்பட்டுள்ளது. நல்லது... ஆகவேதான் இது முத்திரைகளோடு சம்பந்தப்பட்டதல்ல. என்னுடைய சகோதரனோ, சகோதரியோ, இதை எழுதியவர் யாராயிருந்தாலும், எனக்கு தெரிந்தவரை உன்னுடைய கணவனோ அல்லது மனைவியோ மரிக்கும்வரை நீங்கள் மறுபடியும் திருமணம் செய்துக்கொள்ள அனுமதிக்கும் வசனம் எதுவும் இல்லை. ஏனென்றால், அவர்கள் உயிருடன் இருக்கும் வரை

அவர்கள் கட்டப்பட்டு இருக்கிறார்கள் என்று வேதம் கூறுகிறது. பாருங்கள்?

101. ஏதாகிலும் வேதவாக்கியம் உண்டா என்றுதான் கேட்கப்பட்டுள்ளது. பாருங்கள்? நான் அறிந்தவரை எதுவும் இல்லை. திருமணமானவர்களில், ஒருவர் மரிக்கும்போதுதான் மற்றவர் கர்த்தருக்குள் இருக்கும் வேறு யாரையாகிலும் மணந் துக்கொள்ளலாம் என்று பவுல் கூறியுள் ளார். "மரணம் நம்மை பிரிக்கும் வரை" என்றுள்ளது. அதுவேதான். இவ்வண்ண மாகத்தான் நீங்கள் வாக்கு கொடுத்திருக் கிறீர்கள். நீங்கள் பாருங்கள்?

102. ஆகவே இதை அனுமதிக்க எந்த வசனமும் இல்லை. இதற்கேற்ற வார்த் தையை நீங்கள் கண்டிருந்தால் நல்லது தான். ஆனால் என்னை பொறுத்தவரை எனக்கு ஒன்றும் தெரியாது.

# இல்லை, வேறொருவரை விவாகம் செய்து கொண்ட உங்கள் மனைவியை நீங்கள் திரும்பச் சேர்த்துக் கொள்ளக் கூடாது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 61-10-15M கேள்விகளும் பதில்களும் COD #15

Q.159. **சகோ. பிரன்ஹாமே, முன்பு விவாகமாகாதிருந்த ஒரு பெண்ணை நான் விவாகம் செய்தேன். நாங்கள் விவாகரத்து செய்து கொண்டோம். அதன்பிறகு அவ ளுக்கு இருமுறை விவாகமாகி விட்டது. நாம் மணம் புரிய விரும்பினால், முதல் மனைவி யிடம் திரும்பிச் செல்ல வேண்டுமென்று வேதம் உரைக்கிறது. முன்பு விவாகமான அவளிடத்தில் நான் திரும்பிச் செல்ல வேண்டுமா, அல்லது நான் சுயாதீனமா யிருக்க வேண்டுமா?**

168. நல்லது, என் சகோதரனே, அதை நீங்கள் செய்ய இதுதான் ஒரே வழி. இது ஒரு பெரிய பொருள். சபை ஒழுங் கடைந்து அது இருக்க வேண்டிய இடத்தை

அடையுமானால், என்றாகிலும் ஒரு நாள் இதைக் குறித்து பேச விரும்புகிறேன். இதை நான் பயபக்தியுடன் கூறுகிறேன், நான்... விவாகமும் விவாகரத்தும் என்னும் விஷயத்தில் சபைகளில் இரண்டு விதமான கருத்துக்கள் உள்ளன. ஒரு சாரார் ஒரு கருத்தை ஆதரிக்கின்றனர். மற்ற சாரார் மற்ற கருத்தை ஆதரிக்கின்றனர். ஆனால், தேவனுக்கு முன்பாகவும் அவருடைய வேதாகமத்துக்கு முன்பாகவும், கிரு பையை என் இருதயத்தில் கொண்டவ னாய், என் கருத்து என்னவெனில், அவர்கள் இருவருமே தவறு. பாருங்கள். ஆனால் அதில் ஒரு சத்தியம் அடங்கி யுள்ளது.

169. இயேசு உரைத்ததை நீங்கள் கவனிப்பீர்களானால்... இங்கே என் சகோ தரன் இருக்கிறார், இரத்த சம்பந்தமான என் சொந்த சகோதரன். அவர் ஒரு பெண்ணை

மணந்து கொள்ளப் போகிறார். அவருக்கு ஏற்கனவே மணமாகி, ஒரு நல்ல பெண்ணின் மூலம் ஒரு பிள்ளை உள்ளது. அவர் என்னிடம் வந்து மணம் முடித்து வைக்கும்படி கேட்டார். நான் முடியவே முடியாது" என்று சொல்லி விட்டேன்.

170. இயேசு மத்தேயு 5ம் அதிகாரத்தில், "வேசித்தன முகாந்திரத்தினாலொழிய (அவள் விவாகம் செய்வதற்கு முன்பு அவ்விதம் நடந்து கொண்டு அவளுடைய கணவருக்கு அதை தெரியப் படுத்தாமலிருந்தால்) தன் மனைவியைத் தள்ளி விடுகிறவன், அவளை விபசாரஞ் செய்யப் பண்ணுகிறவனாயிருப்பான்; அப்படித் தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்' என்று கூறியுள்ளார் (மத். 5:32). எனவே அப்படி செய்யாதீர்கள். இல்லை, உங்கள் முதல் மனைவி மறுபடி

யும் விவாகம் செய்து கொண்டுவிட்டால், நீங்கள் திரும்பவும் அவளிடம் போகக் கூடாது. ஆனால் நீங்கள் - அவள் உங்களை விவாகரத்து செய்து உங்களைத் தள்ளிவிட்டிருந்தால்.

171. "நான் சுயாதீனமாயிருக்கலாமா?" என்று கேட்டிருக்கிறீர்கள். அதை நான் மறுபடியும் படிக்கட்டும்: "இதற்கு முன்பு விவாகமாகாத ஒரு பெண்ணை நான் விவாகம் செய்தேன். நாங்கள் விவாகரத்து செய்து கொண்டோம். அதன் பிறகு அவளுக்கு இரு முறை விவாகமாகி விட்டது (கேள்வி கேட்ட நபர் விவாகம் செய்து கொள்ளாமல் இருக்கிறார் என்று எண்ணுகிறேன்). நாம் மணம் புரிய விரும்பினால் முதல் மனைவியிடம் திரும்பிச் செல்ல வேண்டுமென்று வேதம் உரைக்கிறது.

172. இல்லை, ஐயா! லேவியராகமத்தில் கூறப்பட்டுள்ள பிரமாணத்தைப் பாருங்கள். அவள் வேறொருவருக்கு உரிமையாகி விட்ட பிறகு நீங்கள் அந்த பெண்ணிடம் சென்றால், அவளை நீங்கள் கறைபடுத்தி, நீங்கள் உங்களை முன்னைவிட மோசமான நிலைக்கு ஆளாக்கிக் கொள்வீர்கள். இல்லை, வேறொருவரை விவாகம் செய்து கொண்ட உங்கள் மனைவியை நீங்கள் திரும்பச் சேர்த்துக் கொள்ளக் கூடாது.

173. இப்பொழுது, “விவாகமாகி விட்ட என் மனைவியினிடத்தில் நான் திரும்பச் செல்லலாமா, அல்லது நான் சுயாதீனமாயிருக்க வேண்டுமா? நீங்கள் சுயாதீனமாயிருக்கிறீர்கள்! சுயாதீனமாக நிலைத்திருங்கள்! ஆம், நீங்கள் திரும்பிச் செல்லாதீர்கள். வேண்டாம், ஐயா! அவள் வேறொருவரை மணந்து கொண்டு

விட்டாள்; அவளை விட்டு விலகியிருங்கள். அதுதான் சரி! வேண்டாம்... அது அசுத்தப்படுத்துகிறது. நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள். நமக்கு இன்னும் சிறிது நேரம் இருந்தால், அதை விவரிக்க எனக்கு விருப்பம். ஆனால் உங்கள் கேள்விக்கு பதிலளிக்கும் வண்ணம், என் சகோதரனே, நீங்கள் யாராயிருந்தாலும், வேண்டாம், ஐயா! உங்களை விவாகம் செய்து கொண்ட பிறகு இரண்டு மூன்று முறை விவாகம் செய்து கொண்ட அந்த பெண்ணிடம் திரும்பச் செல்லாதீர்கள். அது தவறு!

174. இதற்கு முன்பு விவாகமாயிருந்த அந்த தம்பதிகளுக்கு அண்மையில் நான் விவாகம் செய்து வைத்தேன். அவர்கள் விவாகரத்து செய்து ஒருவரையொருவர் பிரிந்தனர் - வயோதிப தம்பதிகள். ஓ, அது சகோதரன் சகோதரி பக்கெட்; அவர்கள் தான் அது. அவர்களால் ஒன்று சேர்ந்து வாழ முடியவில்லை. அவர்களுக்கிடையே

சிறு பூசல் உண்டானது; அவர்கள் விவாகரத்து செய்து கொண்டனர். அவள் மிகவம் உண்மையாக தனியாக வாழ்ந்து வந்தாள். அவரும் அதே விதமாக வாழ்ந்து வந்தார். சற்று கழிந்து. அது எவ்வளவு மூடத்தனம் என்பதை அவர்கள் உணர்ந்து, மறு படியும் விவாகம் செய்து ஒன்றாக வாழ விரும்பினர். நான், “நிச்சயமாக” என்றேன். பாருங்கள்? “அது நல்லது, அப்படித்தான் நீங்கள் இருக்க வேண்டும்” என்றேன். எனவே அவர்கள்... அவர்கள் விவாகமான நிலையிலே இருந்தனர். அவர்கள் விவாகரத்து செய்து கொள்ள வில்லை; அவர்கள் கணவனும் மனைவி யுமாக வாழ்வதற்கு வேண்டிய பத்திரங் களைக் கொடுத்தேன்; அவ்வளவுதான், ஏனெனில் அவர்கள் தொடக்கத்தில் செய்திருந்தனர்.



# நாங்கள் இருபத்தொன்று ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் பதிவு செய்யும் நீதிபதியால் விவாகம் செய்து வைக்கப்பட்டோம். அது தவறா?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 64-08-30M கேள்விகளும் பதில்களும் COD #21

Q .342. **நாங்கள் இருபத்தொன்று ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் பதிவு செய்யும் நீதிபதியால் விவாகம் செய்து வைக்கப்பட்டோம். அது தவறா?**

154 ஆம், அவ்விதம் நீங்கள் செய்தது தவறாகும். விவாகம் என்பது தேவ னுடைய வீட்டுக்கு உரிய ஒன்று. ஆனால் உங்களுக்கு ஏற்கனவே விவாகமாகி விட்ட தால், நீங்கள் எப்பொழுது உண்மையில் விவாகம் செய்து கொள்கிறீர்கள் என்றால், நீங்கள் ஒருவரையொருவர் ஏற்றுக் கொள் வதாக ஒருவருக்கொருவர் வாக்களித்துக் கொள்ளும் போதே. திருமணம் பதிவு செய்யும் நீதிபதி உங்களுக்கு விவாக

சான்றிதழ் கொடுத்து, விவாகமாகாமல் நீங்கள் கணவனும் மனைவியுமாக வாழ் வதற்கு பதிலாக, சட்டப் பூர்வமாக நீங்கள் கணவனும் மனைவியுமாக வாழும்படி செய்கிறார். ஆனால் நீங்கள் அந்த பெண் ணுக்கு வாக்களித்து, அவளும் உங்களுக்கு உண்மையாக வாழ்வதாகவும் உங்களை கணவனாக ஏற்றுக்கொள்வதாகவும் வாக்க ளிக்கும் அந்த நேரத்திலேயே உங்களுக்கு விவாகமாகி விடுகிறது. உங்களுக்கு ஞாபகமுள்ளதால், அதை நான் போன வாரம் விளக்கிக் காண்பித்தேன். அது போன வாரம் என்றுதான் நினைக்கிறேன். பாருங்கள்?

155. வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டிலும் கூட, ஒரு மனிதன் விவாகம் செய்து கொள்ள ஒரு பெண்ணுக்கு நியமிக்கப்படும் போது (அதைக் குறித்த கட்டளைகள் உங்களுக்கு தெரியும். அதை

மீறினால், அது விபச்சாரத்துக்கு சமானம். நிச்சயமாக). அவன் வாக்களித்தால், அவ்வளவுதான்.

156. அன்றொரு நாள், "ஆன்னல் மண்ட்'டும் விவாகரத்தும் ஒன்றா?" என்னும் கேள்வி கேட்கப்பட்டது. பாருங் கள் நண்பனே, இவ்விதமான கேள்விகளை நீங்கள் என்னைக் கேட்கும் போது, அது எனக்கு என்ன செய்கிறது என்பதை நீங்கள் அறிவதில்லை. இரண்டு மூன்று முறை விவாகமான என் நண்பர்கள் பலர் இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கின்றனர். நான் என் சொந்த மகன் பில்லி பாலையும் குறிப்பிடுகிறேன் என்று நீங்கள் உணரு கிறீர்களா? நான் பில்லி பாலை மட்டும் சும்மா விட்டு விடுவேனா? இல்லவே இல்லை. பில்லி பால் ஒரு பெண்ணை விவாகம் செய்து கொண்டான். அவன்

என்னிடம் வந்து, "அப்பா, நான் விவாகம் செய்து கொள்ளப் போகிறேன்" என்றான்.

157. நான் என் காரைக் கழுவிக் கொண்டிருந்தேன். நான், "உன் தலையை சுவற்றில் மோதிக்கொள்" என்று சொல்லி விட்டு, என் காரைக் கழுவிக் கொண் டேயிருந்தேன்.

"நான் விவாகம் செய்து கொள்ளப் போகிறேன்" என்றான்.

நான்.. “ஓ, போடா” என்று சொல்லி விட்டு வேலையில் ஈடுபட்டிருந்தேன். அவன் தன் தாயிடம் சென்றான், அவள் அவனைப் பார்த்து கேலியாக சிரித்தாள். அவன் என்ன செய்தான் தெரியுமா? பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருக்கும் ஒரு சிறு பெண்ணுடன் அவன் ஓடிப் போய் விவாகம் செய்து கொண்டான். நாங்கள் அந்த விவாகத்தை 'ஆன்னல் செய்தோம்

அந்த பெண்ணின் தகப்பனும் நானும். நாங்கள் அந்த விவாகத்தை 'ஆன்னல்' செய்தோம், இருப்பினும் அவன் விவாகம் செய்து கொண்டதாகவே கருதப்பட வேண் டும். அவன் என் பையன், அவன் இங்கு உட்கார்ந்து கொண்டு நான் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருக்கிறான். இப்பொழுது, அது முற்றிலும் உண்மை.

158. அவன் இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கிற அந்த பெண்ணுடன் என்னிடம் வந்து, என் மருமகள். என் பேரன்... அவன், "அப்பா, எனக்கு விவாகம் செய்து வையுங்கள்" என்றான்.

159. நான் "முடியவே முடியாது" என்று சொல்லிவிட்டேன். அது என் சொந்த மகன். அவனை நான் தூக்கி சுமந்து, என் னால் முடிந்த எல்லாவற்றையும் அவ னுக்குச் செய்து, அவனுக்கு நான் தாயும்

தகப்பனுமாய் இருந்து வந்திருக்கையில், இது என் இருதயத்தை ஊடுருவிக் குத்தவில்லை என்றா நினைக்கிறீர்கள்? அதை கூறுவது என்னைக் கொல்லவில்லை என்றா நினைக்கிறீர்கள்? ஆனால் அது உண்மை. நிச்சயமாக! என மகன் இங்கு உட்கார்ந்து கொண்டு கேட்டுக் கொண் டிருக்கிறான். என் மருமகளும் என் சிறு பேரனும் இங்கு உட்கார்ந்து கொண் டிருக்கின்றனர். அது தவறென்று நான் அவனிடம் கூறுகிறேன் (பாருங்கள்?), ஏனெனில் நான் கூறியாக வேண்டும். அந்த வார்த்தைக்கு நான் கடமைபட்டவனா யிருக்கிறேன்.

160. நீங்கள் திருமணம் பதிவு செய்யும் மாஜிஸ்ட்ரேட்டினால் விவாகம் செய்து வைக்கப்பட்டீர்களா? சபை உங்களை விவாகம் செய்து வைத்திருக்க வேண்டும் சபையிலுள்ள போதகர். அதுவேஒரு

கிறிஸ்தவன் செய்யக் கூடிய நாணயமான காரியம். ஆனால் நீங்கள் ஏற்கனவே அந்த வாக்குத்தத்தத்தை, அந்த பொருத் தனையை செய்து கொண்டு, இருபத் தொன்று ஆண்டுகளுக்கு முன்பு விவாகம் செய்து கொண்டதால், அதனால் பரவா யில்லை என்று நினைக்கிறேன்.

நீங்கள், "நல்லது. நான்..." எனலாம்.

161. ஒருக்கால், "நான் வந்து, மீண்டும் விவாகம் செய்து கொள்ள வேண்டுமா?" என்னும் கேள்வி எழலாம். உங்களுக்குப் பிரியமானால் செய்யுங்கள். உங்கள் விசுவாசத்துக்கு இடையூறாக இருக்கும் எதையும் மனதில் வைக்காதீர்கள். ஏனெ னில் அப்படிப்பட்ட ஏதாகிலும் இருந்தால், நீங்கள் இங்கிருந்து முன்னேற முடியாது; நீங்கள் இங்கேயே நின்றுவிடுவீர்கள். அந்த கேள்விக்குறி வரும்போது, இந்த இடத்தி

லேயே நீங்கள் முடிந்து விடுவீர்கள். ஆனால் இப்பொழுது, என்னைப் பொறுத்த வரையில், அதனால் பரவாயில்லை.

163. ஆனால் இதை ஞாபகம் கொள்ளுங்கள், இது என்னை நோகப் பண்ணுகிறது. நான் கேட்டால் அவர்கள் கண்ணையும் பிடுங்கி எனக்குத் தரக்கூடிய மிகவும் நெருங்கிய நண்பர்கள் ஆண் களும் பெண்களும் இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கின்றனர் (ஆம், ஐயா!), அவர்கள் இருமுறை விவாகமானவர்கள், சிலர் மூன்று முறையும் கூட. அவர்கள் இப்பொழுது இங்கு உட்கார்ந்து கொண் டிருக்கின்றனர். நான் நேசிக்கின்ற என் சொந்த மகன், என் சொந்த பேரன், மற்றும் என் மருமகள்... பில்லியைப் பாருங்கள், அவனை நான் எவ்வளவாக ஆதரித்தேன், அவன் எனக்கு என்ன செய்தான் பாருங்கள். உண்மையைச் சொன்னாலும்

சொல்லாமல் போனாலும், உண்மை உண்மைதான்.

164. எனக்கு... இன்று நான் வெளியே சென்று, அசெம்பிளீஸ் ஆப் காட் சபை அல்லது வேறு சபையிலுள்ள ஜனங்களை அழைத்து, "நான் சொன்னதெல்லாம் தவறு, அந்த வார்த்தையுடன் நான் நிலைத் திருக்கப் போவதில்லை, நான் உங்களுடன் நிலைத்திருக்கப் போகிறேன்" என்று என்னால் கூற முடியும். அவ்விதம் நான் செய்தால், எனக்குள்ள இந்த தேவனுடைய வரத்தைக் கொண்டு நான் வெகு விரைவில் மிகவும் பிரபலமான ஒருவனாகி விட முடியும். எனக்குள்ள செல்வாக்கு அனைத் தையும் இந்த ஸ்தாபனங்களில்ஒன்றுக்கு அளித்தால், அவர்கள் மத்தியில் எனக்கு பெரிய பெயர் கிடைக்கும். அவர்கள் மத்தியில் எனக்கு பெரிய பெயர் கிடைக்க வேண்டுமென்ற கவலை எனக்கில்லை.

அவர்களை நான் நேசிக்கிறேன், அது உண்மை. ஆனால் நான் உண்மையுள்ள வனாக இருக்க வேண்டும். அவ்விதம் நான் செய்தால், நான் ஒரு மாய்மாலக் காரனாக இருப்பேன்.

165. இங்கு நான் நின்று கொண்டு, ஒரு பெண்ணுக்கு வாக்களித்த என் சொந்த மகன் இங்கு உட்கார்ந்திருக்கையில், நான் உண்மையைக் கூறாமல் போனால். ஒரு மாய்மாலக்காரனாயிருப்பேன். நான் சொன்னேன். அவனுக்கு அந்த திருமண வைபவம் நடந்திராமல் போனாலும், அவன் அந்த ஸ்திரீயுடன் வாழ்ந்து, அவளுடன் உறங்கி, அவன் என்ன செய்திருந்தாலும், அவன் அவளுக்கு வாக்களித்த போது அவளை மணந்து கொண்டான் அது பில்லி பாலாயிருந் தாலும் வேறு யாராயிருந்தாலும், அது முற்றிலும் உண்மை. அவன் வாக்களித்த

போதே அவன் மணந்து கொண்டான். அது நானாயிருந்தாலும், அதுவேதான்.

166. நாம் உண்மையுள்ளவர்களா யிருக்க வேண்டும். நான் என் மகனுடன் உண்மையுள்ளவனாயிராமல் போனால், உங்களுடன் உண்மையுள்ளவனாயிருக்க முடியாது. நான் உங்களிடம் கூறுவது என் உண்மையுள்ள கருத்து என்பதை நீங்கள் விசுவாசிக்க வேண்டுமென்று விரும்பு கிறேன். அதிலிருந்து எதையும் உண்டாக்கி விடாதீர்கள், நான் சொன்னவிதமாகவே அதை சொல்லுங்கள் (பாருங்கள்?), ஏனெனில் நான் உங்களுக்கு உண்மையையே உரைக்கிறேன்.

167. இப்பொழுது, நான் உங்களிடம் இவ்விதமாக அடிக்கடி பேசுவதில்லை, ஏனெனில் நீங்கள் என் பிள்ளைகள், அவ்விதமே உங்களை நான் அழைக்கி

றேன். நான் சுவிசேஷத்தின் மூலம் உங்களை கிறிஸ்துவுக்கு பெற்றெடுத்தேன். நாம் இங்கு ஒன்றாய் இருக்கும் போது, நம்முடைய சொந்த குழு இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கும் போது, உங்களை சிறிது கடிந்து கொள்கிறேன். ஆனால் இதை உங்களிடம் கூற விரும்புகிறேன். நீங்கள் என்னிடம் வந்து ஏதாவதொன்றை கேட்பீர்களானால், எனக்குத் தெரிந்ததை உங்களுக்குச் சிறந்த முறையில் எடுத்துரைப்பேன். அது வார்த்தையில் இருக்குமானால், அது என்னைக் குற்றப்படுத்தினாலும் எனக்குக் கவலையில்லை, என்னிடமிருந்தும் அநேக காரியங்கள் அகற்றப்பட வேண்டியதாயுள்ளது. நிச்சயமாக!

168. நீங்கள் என்னிடம் ஏதாவதொன்றைக் கேட்டால், நான் உங்களுக்கு பதில் கூறுவேன். உங்களுக்கு நான் ஏதாவதொன்றைக் கூறினால், உங்களுக்கு நான்

சத்தியத்தையே கூறுவேன். அவ்வித மாகவே வாழ நான் எப்பொழுதும் முயன்று வந்திருக்கிறேன். அவ்விதமாவே நான் வாழ்ந்து அவ்விதமாகவே நான் மரிக்க விரும்புகிறேன் எவரிடத்திலும் உண்மையுள்ளவனாயிருக்க.

169. அண்மையில் ஒரு இளம் பெண் என்னிடம் வந்தாள்; அந்த ஸ்திரீ இப்பொழுது இங்கில்லை. டாம் சிம்ப்ஸன், உங்களில் பலருக்கு அவரைத் தெரியும். டாம் நல்லவர்; அவருடைய குடும்பத்தினர் இங்கில்லை (அவர்கள் எல்லோரும் திரும்பி போய் விட்டனர் என்று நினைக்கிறேன், ஃபிரட் இன்னும் இங்கு இருந்தாலொழிய. நான்... பிரட் சாத்மன், அவர் இங்கிருக்கிறாரா இல்லையாவென்று எனக்குத் தெரியவில்லை. அவர் இருக் கிறார் என்று தான் நினைக்கிறேன்) டாம் சிம்ப்ஸன், அவர் ஃபிரட்டுடன் கூட

கனடாவிலிருந்து வந்தவர். அவர்கள்... (உங்களுக்கு நமது தர்மகர்த்தா ஃபிரட் டைத் தெரியும்).

170. உங்களில் பலருக்கு சகோ.டாம் மைத் தெரியும். டாம்" அருமையான ஒரு மனிதன்; அவர் சிறந்த உடை உடுப்பவர்; திருமதி சிம்பஸனும் கூட. அவள் மட்டும் நான் சொல்வதற்கு செவிகொடுத்தால், அவள் மீண்டும் நடப்பாள். அவள் ஊனமுற்றவளாய் சக்கர நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். அவள் என்ன செய்ய வேண்டும் என்று சொல் லப்பட்டதை அவள் மட்டும் செய்வா ளானால், அவள் நடப்பாள். அது உண்மையா என்பதை கவனித்து அறிந்து கொள்ளுங்கள். பாருங்கள்? இப்பொழுது அவள் அதை எதிர்பார்த்தால், அவள் என்ன செய்ய வேண்டுமென்று கூறப்பட் டதோ, அவள் அதை செய்ய வேண்டும்.

171. அவளுடைய பெண்களில் ஒருத்தி, அழகான சிறு பெண்கள்... நான்... அவர்கள் சிறுமிகளாயிருந்த போது, அவர்களை என் தொடையின் மேல் வைத்து அவர்களுடன் விளையாடுவது வழக்கம். இப்பொழுது அவர்கள் பெரியவர்களாகிவிட்டனர்; அவர்கள் ஏறக்குறைய ஸ்திரீகள், பத்து பன்னிரண்டு வயதுடையவர்கள். எனவே அவர்களில் ஒருத்தி என்னிடம் வந்து, "சகோ. பிரன்ஹாமே, நான் ஒரு சொப்பனம் கண்டேன்" என்றாள். அவள் என்னிடம் அந்த சொப்பனத்தை உரைத்தாள். "அதன் அர்த்தம் என்ன?" என்று அவள் கேட்டாள்.

நான், "தேனே, எனக்குத் தெரியாது. நான் ஜெபிக்கிறேன், கர்த்தர் எனக்கு அதை அருளுவாரானால், நான் உன்னிடம் கூறுகிறேன்" என்றேன்.

172. அவள், "சரி" என்றாள். சில நாட்களுக்குப் பிறகு அவள் என்னிடம் வந்து, “அந்த சொப்பனம் கிடைத்து விட்டதா?" என்று கேட்டாள்.

நான், "இல்லை, தேனே, எனக்குக் கிடைக்கவில்லை; அவர் எனக்கு வெளிப் படுத்தி தரவில்லை என்றேன்.

173. ஓரிரண்டு வாரம் கழித்து அவள் திரும்பவும் வந்து, "சகோ.பிரன்ஹாமே, அந்த சொப்பனத்தைக் குறித்தென்ன?" என்று வினவினாள்.

நான், “எனக்குத் தெரியாது” என்று சொன்னேன். அவள் ஏமாற்றமடைந்தது போல் காணப்பட்டாள். நான்...

174. இதை ஞாபகம் கொள்ளுங்கள், நீங்கள் என்னிடம் ஏதாவதொன்றைக் கேட்டு, அதை நான் தேவனிடத்திலிருந்து

பெறவில்லை என்றால், எனக்கும் கூட ஏமாற்றம் உண்டாகிறது. ஆனால் நான் மாய்மாலக்காரனாக அல்லது பொய்யனாக இருக்க மாட்டேன், உங்களிடம் நான் உண்மையே எடுத்துரைப்பேன். அவர் என்னிடம் கூறுவாரானால், அதை நான் உங்களுக்கு எடுத்துரைப்பேன்; அவர் கூறாமல் போனால், நானும் கூறமாட்டேன். அவ்வளவுதான் என்னால் செய்ய முடியும். அவ்விதமாக நீங்கள் என்னை நம்ப வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

175. அந்த சொப்பனத்தின் அர்த்தம் என்னவென்று என் மனதில் அறிந் திருந்தேன். ஆனால் அது சரியென்று எனக்கு எப்படித் தெரியும்? அதை நான் மறுபடியும் காண வேண்டும். கர்த்தருடைய நாமத்தில் நான் சொப்பனத்துக்கு அர்த்தம் உரைத்து, அது அவ்விதமாக இருக்க வில்லை என்று எப்பொழுதாவது எந்த ஒரு

இடத்திலுள்ள யாருமே தன் விரலைச் சுட்டிக் காட்டி என்னைக் குற்றப்படுத்த முடியாது. ஆம், ஐயா! நான் கர்த்தருடைய நாமத்தில் உரைத்த ஏதொன்றும் அதேவித மாக நிறைவேறாமல் போனதில்லை. ஏனெனில் நான் அது அவர். அப்பொழுது அது என் பொறுப்பல்ல, அது அவருடைய பொறுப்பாகி விடுகிறது.

176. நான், "பார். ட்ரூடி, நாம் அரிசோனாவுக் குப்போகிறோம் என்று வைத்துக்கொள்வோம், நீ அங்கு அடைந்த பிறகு நான் உன்னிடம் வந்து, "**கர்த்தர் உரைக்கிறதாவது**; உன் தம்பி (சிறு ஜானி, அவனுடைய வயிறு எப்பொழுதும் திறந்திருக்கிறது என்று நான் கேலி செய்வது வழக்கம்)... நான் அவளிடம், “அவன் தெருவில் வாகனம் ஏறி மரித்துப் போனான் என்று வைத்துக் கொள்வோம். நான் உன்னிடம் என்ன நடக்கப்போகிற

தென்று உனக்குத் தெரியும், அவன் தெருவில் வாகனம் ஏறி மரித்துப் போவான்' என்கிறேன். நீ என்னிடம் வந்து, “சகோ. பிரன்ஹாமே...' என்பாய். அல்லது அவனை சகோ. பிரன்ஹாமிடம் கொண்டு செல்லுங்கள்' என்பாய். அதன் பிறகு நீ என்னைத் தேடிக் கொண்டு வந்து, அப் பொழுது நான் வெள்ளை சூட் அணிந்து கொண்டிருக்கும் ஒரு மனிதனுடன் படிக்கட்டில் நின்று பேசிக்கொண்டிருப் பேன். நான் ஜானியின் மேல் கை வைப்பேன். அவன் உயிர் பெற்று ஓடிப்போவான்" என்று சொன்னேன். நான் அவளிடம், "அதே விதமாக நீ மேற்கு பிரதேசத்துக்கு செல்கிறாய், முதலாவதாக என்ன தெரியுமா, ஒரு நாள் உன் தாயார் கதறுவதையும், உன் தந்தை கதறுவதையும் நீ கேட்கிறாய். நீ பார்த்த போது, ஜானி வாகனம் ஏறி மரித்துப் போயிருப்பதைக்

காண்கிறாய். நீ என்ன செய்வாய்?' என்று கேட்டேன். பாருங்கள்? நீங்கள் என்னை நம்புகிறீர்கள். பாருங்கள்? உங்களுக்கு என் மேல் நம்பிக்கை இருக்க வேண்டு மென்று விரும்புகிறேன். நான் எதையும் ஊகித்து உங்களிடம் கூறப் போவதில்லை. உங்களிடம் நான் உண்மையைக் கூறு வேன், இல்லையென்றால் ஒன்றையும் கூற மாட்டேன். நான் அவளிடம், "அதன் பிறகு நீ என்னிடம் வந்து, 'ஓ, சிறு ஜானி' - அல்லது நீ உன் தாயிடம் வந்து, 'ஓ, சிறு ஜானி வண்டி ஏறி கொல்லப்பட்டான். அவன் மரித்துப் போனான், அவன் மரித்துப் போனான்' என்று கூறுகிறாய் என்று வைத்துக் கொள்வோம்.

177. டாக்டர் வருகிறார், அவனுடைய கண்களை திறந்து பார்க்கிறார், அவ னுடைய இருதயத்தை, அவனுடைய மூச்சை பரிசோதிக்கிறார். அவர், "அவன்

இறந்துவிட்டான், அவனை சவக் கிடங்குக்கு கொண்டு செல்லுங்கள்' என்கிறார், அப்பொழுது நீ, "ஒரு நிமிடம் பொறுங்கள்! ஒரு நிமிடம் பொறுங்கள்! அவனை என் கரங்களில் ஏந்திக் கொள்கிறேன்; நாம் நடப்போம்" என்கிறாய். ஆமென்

"ட்ரூடி, நீ எங்கே போகிறாய்?"

“எனக்குத் தெரியாது"

"உன் கரங்களில் என்ன?" இறந்து போன உன் தம்பியை நீ கரங்களில் ஏந்திக் கொண்டிருக்கிறாய். நீ தெருவில் நடந்து சென்று கொண்டேயிருக்கிறாய். ஜனங்கள் "அந்தப் பெண்ணுக்கு பைத்தியம் பிடித்து விட்டதா?" என்று கேட்கின்றனர். இல்லை, ஐயா! அவள் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதைக் கொண்டிருக்கிறாள். என்ன நடக்கப் போகிறது?

178. முதலாவதாக என்ன தெரியுமா? நீ உன் தகப்பனிடமும் தாயினிடமும், "பொறுங்கள், நாம் சகோ.பிரன்ஹாமைக் கண்டு பிடிப்போம். அவர் வெள்ளை சூட் அணிந்துள்ள ஒரு மனிதனுடன் படிக்கட்டு களில் நின்று கொண்டு பேசிக் கொண் டிருப்பார். அதோ அவர் அங்கு நின்று கொண்டிருக்கிறார். என்ன நடக்கிறதென்று பாருங்கள்" என்பாய். உன் மனதில் எவ்வித சந்தேகமுமில்லை. நீ என்னிடம் நடந்து வந்து, "சகோ.பிரன்ஹாமே, நீங்கள் என்னிடம் என்ன கூறினீர்கள் என்று ஞாபகம் உள்ளதா?" என்பாய்.

"ஆம், ட்ரூடி, ஜானி எழுந்திரு" அவன்குதித்தெழுந்து தெருவில் ஓடிப் போவான்.

179. நான் என் மனதில் சரியென்று படும் சில காரியங்களை ஊகித்து உங்க

ளிடம் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்று சொல்லி விட்டு, அது தவறாயிருந்து, அது நடக்காமல் போனால், அது நிறை வேறாமல் போனால், அந்த பையனைக் குறித்து நீ பயம் கொண்டிருப்பாய். அவனைக் கொண்டு வர வேண்டுமா வேண்டாமா என்று உனக்குத் தெரியாது.

180. உங்களுக்கு உதவி செய்ய தேவன் என்னை இங்கு அனுப்பியிருக் கிறார். அது உங்களை வெட்டினாலும், நோகப் பண்ணினாலும், என்ன செய்தா லும், அதை நான் கூறியே ஆக வேண்டும்.

181. இப்பொழுது விவாகமும் விவா கரத்தும் என்னும் விஷயத்தில், நான் அதைக் குறித்து பேசுவதை நீங்கள் கேட்கும் வரைக்கும் அமைதியாயிருங்கள் என்று ஒரு சகோதரனைப் போல உங்க ளைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். நான்

சொல்வது உங்களுக்குக் கேட்கிறதா? நீங்கள் தற்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கிற விதமாகவே வாழ்ந்து கொண்டிருங்கள் (நான் இதன் பேரில் அதிக நேரம் எடுத்துக் கொண்டு விட்டேன்).

182. "நாங்கள் இருபத்தொன்று ஆண்டுகளுக்கு முன்பு விவாகம் செய்து கொண்டோம் (ஆம்) திருமணம் பதிவு செய்யும் நீதிபதியால்" அருமை சகோதரியே, அருமை சகோதரனே, ஒரு முறை விற்பனையாளன் (Salesman) ஒருவர் என்னிம் இதைக் கூறினார், அவர் கனெக்டிகட் என்னுமிடத்தில் அல்லது அங்கிருந்த ஏதோ ஓரிடத்தில் ஒரு ஆலயத்துக்குள் நுழைந்தாராம் (அவர் ஒரு கிறிஸ்தவர்). அது ஒரு பெரிய ஆலயம், அவர் ஜெபிப்பதற்காக உள்ளே நுழைந்தார். அவர் உள்ளே நுழைந்து, ஜெபம் பண்ணுவதற்காக அந்த ஆலயத்தில்

முழங்கால்படியிட்ட போது... அவர் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு பிரயாணம் செய்து கொண்டிருந்தார், வீட்டைக் குறித்த ஞாபகம் வேறு அவருக்கு வந்து விட்டது. அவர் ஒரு விற்பனையாளர். அவர் தொழிற்சாலை களுக்கு தேவையான பொருட்களை விற்பனை செய்து கொண்டே செல்பவர். அவர் ஏதோ ஒன்றை வாங்குவதற்காக அந்தப் பக்கம் சென்றிருந்த போது, இந்த ஆலயத்தைக் கண்டாராம். "நான் போவேன். நான் உள்ளே போய் ஜெபம் பண்ணுவேன்" என்று மனதில் நினைத்துக் கொண்டாராம். ஆலயத்தின் கதவுகள் திறந்திருந்தன, அவர் உள்ளே சென்றாராம். அங்கு யாரும் இருந்ததாகத் தெரிய வில்லை, அவர் முழங்கால்படியிட்டு ஜெபம் பண்ணத் தொடங்கினார். அவர் ஏறக்குறைய ஒரு மணி நேரமாக அங்கு

ஜெபித்துக்கொண்டிருந்த பிறகு, கதவுகள் படாரென்று அடைக்கப்படும் சத்தத்தை அவர் கேட்டாராம். அது ஒருவேளை ஆலயக் காப்போனாக இருக்குமென்று எண்ணினாராம். சிறிது நேரம் கழித்து யாரோ பேசுவதை அவர் கேட்டார். அவர் மெல்ல நழுவி, அது ஆலயக் காப்போனா என்று கண்டுகொள்ள, சுற்று முற்றும் பார்த்தாராம். அங்கு ஒரு மனிதனும் ஒரு ஸ்திரீயும் பீடத்துக்கு முன்பாக நின்று கொண்டு ஒருவர் கையை ஒருவர்பிடித்துக் கொண்டிருந்தனர். அந்த மனிதன் அந்த ஸ்திரீயிடம், "அன்பே, உன்னை நான் சட்டப்படி விவாகமான என் மனைவியாக ஏற்றுக் கொள்ளுகிறேன்" என்றாராம். அவளும், “அன்பே, உம்மை நான் சட்டப்படி விவாகமான என் கணவனாக ஏற்றுக் கொள்கிறேன்" என்றாளாம்.

"இது என்ன விசித்திரமாயுள்ளதே, இந்த மனிதனும் ஸ்திரீயும் போதகர் இல்லாமலேயே விவாகம் செய்து கொள் கின்றனரே" என்று இந்த பெந்தெகொஸ்தே காரன் நினைத்தாராம். பாருங்கள்? எனவே அவர் உட்கார்ந்து கொண்டு, அவர்கள் ஒருவருக்கொருவர் உண்மையுள்ளவர் களாக வாழ்வார்கள் என்றும், மரணம் தவிர வேறொன்றும் அவர்களைப் பிரிக்கா தென்றும் அவர்கள் பொருத்தனை செய்து முடிக்கும் வரைக்கும் காத்திருந்தாராம். அதன் பிறகு அவர்கள் ஒருவர் மேல் ஒருவர் கை போட்டு, ஒருவரை யொருவர் முத்தமிட்டு, சிரித்துக் கொண்டே ஆலயத்தை விட்டு வெளி நடந்தனராம். அவர் அவர்கள் பின்னால் ஓடிச் சென்று “ஒரு நிமிடம், இது என்னவென்று அறிந்து கொள்ள எனக்கு ஆர்வம் தோன்றுகிறது.

நீங்கள் இருவரும் விவாகமா செய்து கொண்டீர்கள்?" என்று கேட்டாராம்.

அவர்கள் “ஆம்” என்றனராம்.

"போதகர் இல்லாமலா?"

அதற்கு அந்த மனிதன், "இல்லை! எங்களுக்கு விவாகமாகி நாற்பது ஆண்டுகளாகி விட்டது. நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு இதே பீடத்துக்கு முன்பாக நாங்கள் விவாகம் செய்து கொண்டோம். ஆனால் ஒவ்வொரு ஆண்டும் விவாகத் தினத்தன்று நாங்கள் இங்கு வந்து எங்கள் விவாகப் பொருத்தனைகளை புதுப்பித்துக் கொள்கிறோம்" என்றாராம். பாருங்கள்.

183. ஆனால் விவாகம் செய்து கொள்ளுதலைப் பொறுத்த வரையில், நீங்கள் அவளுக்கு வாக்களிக்கும் போதே, அவள் உங்கள் வார்த்தையை ஏற்றுக்

கொள்கிறாள்; நீங்களும் அவள் வார்த் தையை ஏற்றுக் கொள்கிறீர்கள். தேவன் உங்கள் இருவருடைய வார்த்தையையுமே ஏற்றுக்கொள்கிறார் பாருங்கள்? எனவே நீங்கள் வெறுமனே வாக்கு கொடுக்கா தீர்கள்... (ஒலிநாடாவின் முதல் பக்கம் முடிகின்றது - ஆசி).



# விவாகமும் விவாகரத்தும்

## என்பதின் பேரில் கேள்விகளும் பதில்களும்

2



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து